வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 90 of 2022

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. தனலெட்சுமி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | ரெங்கசாமி | வயது | : | |
| கிராமம் | : | பல்லடம் வடுகபாளையம் காளியப்பா நகர் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.11.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 03.11.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஆடு மேய்த்து வருகிறேன். எனக்கு மகன் மற்றும் மகள் இருக்கிறார்கள். எனக்கு எதிரி ராமசாமி உடன்பிறந்த தம்பி ஆவார். எங்கள் இருவருக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 04.10.2019 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நான் வீட்டில்இருந்தபோது எதிரி என் வீட்டின் பக்கத்தில் இருந்த இரண்டு நபர்களும் வாடகைக்கு வைத்துள்ளார் அவர்கள் எங்களிடம் குடித்து விட்டு வந்து இங்கு ஆடு கட் கூடாது என்றும் சொல்லி பிரச்சனை செய்து வந்தார்கள். இது சம்மந்தமாக நான் எதிரியிடம் சொன்னேன் ஆனால் அவர்கேட்க்கவில்லை இதை மனதில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து கீழே கிடந்த பெரிய முள் கட்டையை எடுத்துக்கொண்டு ஆபாசாமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டு எனது இடது கையில் அடித்தார் அதனால் முள் ஏறி இரத்தம் வந்தது. அக்கம் பக்கம் சத்தம் போட்ட வுடன் என் மகன் வந்தார் அவரை பார்த்தவுடன் கட்டையை வீசிவிட்டு ஓடிவிட்டார். என் மகன் ஆட்டோ மூலமாக பல்லடம் அரசு மருத்துவமனையில்

சிகிச்சையில் சேர்த்தார். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். மருத்துவமனையில் நான் நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எதிரி அடித்ததால் தற்போது வரை எனது கையை என்னால் தூக்கி வேலை செய்ய முடியவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

எதிரி ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.11.03 18:33:32 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 90 of 2022

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. பார்திபன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி | வயது | : | |
| கிராமம் | : | பல்லடம் வடுகபாளையம்<br>காளியப்பா நகர் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.11.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 03.11.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரி எனது மாமா ஆவார். அவருக்கு எங்களுக்கும் சொத்து சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 04.10.2019 ஆம் காலை 10.00 மணிக்கு என் அம்மா வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு அருகில் வாடகைக்கு குடியிருந்தவர்கள் தண்ணி போட்டுக்கொண்டு சத்தம்போட்டதால் அதை என் மாமாவிடம் கேட்டதற்கு நான் அப்படிதான் இருப்பேன் என்று சொன்னார். அதை மனதில் வைத்துக்கொண்டு என் மாமா எங்கள் வீட்டிற்கு வந்து என் அம்மாவை ஆபாச வார்த்தையால் திட்டி தடியை எடுத்து என் அம்மாவின் இடது கையில் அடித்தார். சத்தம் கேட்டு ஓடிவந்தபோது அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். நான் அம்மாவை பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரி ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.11.03 18:33:40 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.